மலர் : 20
இதழ் : 9

# அடித்தளம்

அன்பியங்களின் தொடர்பிதழ்

குழித்துறை மறைமாவட்டம்

செப்டம்பர் 2025

தனிச்சுற்றுக்கு மட்டும்



## விளம்பரமில்லா விதைகள்...

# மறைவட்ட பொதுக்குழுக்கள்



முளகுமூடு மறைவட்டம்



திரித்துவபுரம் மறைவட்டம்



காரங்காடு மறைவட்டம்



மாத்திரவிளை மறைவட்டம்



வேங்கோடு மறைவட்டம்



புத்தன்கடை மறைவட்டம்


**ஆசிரியர் குழு**

அருட்பணி M.ஆல்வின் விஜய்
வேதியர் M.பேபி கமலா
திரு. S.ஜாண் பெல்லார்மின்
திருமதி T.ஷீலா
திருமதி K.ரெத்தினபாய்

## இயக்குநரிடமிருந்து

இறை இயேசுவில் அன்பானவர்களே! மழலையாய் உதித்து, மானிடராய் உருவெடுக்கும் அனைவரின் எதிர்காலத்தை உருவாக்க வழிவகுக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு மனம் உவந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்.

கருவாய் படைத்து. உருவம் கொடுத்து காலமெல்லாம் காத்து வழிநடத்தும் இறைவனும், கருவில் தாங்கி, அன்பைப் புகட்டி, அரவணைப்பைத் தந்து அழகிய உலகில் நடைபயில கைகோர்த்து நிற்கும் பெற்றோரும், கல்விக்கண் திறந்து கரைகாணா உலகை சுற்றி வர அறிவை ஊட்டி, எத்திக்கும் தான் பெற்ற புகழைப் பறைசாற்ற சான்றோனாக்கியவர் என அனைவரும் ஆசிரியர்களே.

உலகை மீட்க வந்த இறைமகனை இவ்வுலகிற்கு அர்ப்பணித்து, அமைதியை இவ்வுலகிற்கு அளிக்க தன் மகனை வளர்த்தெடுத்த அன்னை மரியாவின் பண்பு தான் சிறந்த ஆசிரியரின் அடையாளம், இன்றைய உலகில் எத்தனைப் பெற்றோர்கள் அன்னைமரியாவின் அர்ப்பண மனநிலையைக் கொண்டுள்ளோம். சிந்திக்கலாமே.

காலம் மாறிவிட்டது. ஆம் நாகரீகம் என்ற பெயரில் அன்பை மறந்து, ஒழுக்கத்தை இழந்து, பண்பை களைந்து, குடும்ப உறவுகளை சிதைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாகரீகம் என்பது. மனிதனின் அடிப்படை தேவைகள் துவங்கி ஆயுள் வரையிலான வாழ்க்கையிலும் தொடர்ந்து கொண்டே வருகிறது. எது நாகரிகம் ? நாகரிகம் என்ற பெயரில் ஈன்றெடுத்த அன்னையையும் தந்தையையும் முதியோர் இல்லத்திற்கு அனுப்புவதா ? உண்ணும் உணவில் நாகரிகம் என்ற பெயரில் இயற்கையான உணவை அழித்து செயற்கைக்குத் தாவுவதும், ஆரோக்கியமான வாழ்வை மறந்து ஆயுள் வரை நோயினால் அவதிப்பட்டு வாழ்வை மாய்ப்பதும் நாகரிகமா ?

அன்பின் விழுமியங்களைப் பகிரும் நாம் நமது அன்பியங்கள் மூலம் சிறியவர் தொடங்கி பெரியவர் வரை நன்மையையே செய்வோம். அன்னை மரியா ஏற்றுக் கொண்ட அர்ப்பண உணர்வை நம் ஒவ்வொருவர் உள்ளங்களிலும் வளர்த்துக் கொள்வோம். ஒருவரை நலமாக்கும், வளமாக்கும் நற்செயல்களைச் செய்து இயேசுவைப் போன்று, அன்னை மரியாவைப் போன்ற நல் ஆசிரியராக உருவெடுக்க அன்பியங்கள் பறைசாற்றும் கல்விக்கூடமாகட்டும் என்று மனமார வாழ்த்துகிறேன்.

பணி தோழமையில்

அருட்பணி. **M. ஆல்வின் விஜய்**

இயக்குநர், அன்பியப் பணிக்குழு

முதல் வாரம்

# எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பி

அருட்பணி. **ம. டைட்டஸ் மோகன்**



கல்லைத் தட்டியும் செதுக்கியும் வடிவமைக்கும் சிற்பி போல, ஓர் ஆசிரியரும் மாணவர்களின் வாழ்க்கைப் பாதையை அழகுற வடிவமைக்கும் சிற்பியாவார். கல்வி என்பது கற்களால் கட்டப்படும் கோயில் அல்ல. அது மனித மனங்களில் செதுக்கப்படும் ஓர் உயரிய கலை. ஆசிரியர் தம் கரங்களால் அல்ல, ஆன்மாவால் மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்குகிறார். எனவேதான் ஆசிரியர் என்பவர் எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பி என்கிறோம். மாதா, பிதாவிற்கு அடுத்த நிலையில், தெய்வத்திற்கு முந்தைய நிலையில் குருவை வைத்துப் பெருமை செய்கிறோம்.

அர்ச்சுனனுக்கு ஒரு துரோணாச்சாரியார்போல், வால்மீகி உருவாகக் காரணமான நாரதரைப்போல், விவேகானந்தருக்கு ஒரு ராமகிருஷ்ண பரமஹம்சரைப்போல், பீமாராவுக்கு ஓர் அம்பேத்கார்போல் ஒவ்வொரு மாணவக் கண்மணிகளுக்கும் ஏதாவது ஓர் ஆசிரியர் வாழ்வில் தாக்கத்தை விதைப்பவராக இருந்து மாற்றத்தை இச்சமூகம் அறுவடை செய்திருக்கிறது. நம் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களும் தன் மரணத்திற்கு 10 நாட்களுக்கு முன்னதாக (ஜுலை 18, 2015) தமிழகம் வந்தபோது, தனக்கு 1952 ஆம் ஆண்டு பி.எஸ்.சி இயற்பியல் பாடம் கற்றுத்தந்த பேராசிரியர் முனைவர் சின்னத்துரை அவர்களைச் சந்தித்து ஆசி பெற்றுள்ளார், ஆசிரியர் பணியின் மகத்துவங்கள் இவை ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது.

**இன்றைய எதார்த்தமும் எதிர்பார்ப்பும்** :

அறநெறிகள் தொலைந்தச் சூழல், வணிகமயமாகிவிட்ட கல்வி, பொருளாதாரச் சந்தைக்குத் தயாராக உருவாக்கி வைத்திருக்கும் கல்விக்கூட கட்டமைப்புகள், போட்டிக்களமாகிவிட்ட தேர்வு முறைகள்... இவற்றின் மத்தியில் ஆசிரியர் மாணவர் உறவு எப்படி இருக்கிறது? "கற்பித்தல் – கற்றல் பாணி" எங்ஙனம் வாழ்வை வடிவமைப்பதாய் அமைந்துள்ளது? குறிப்பாக எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பியாக

செயல்படும் ஆசிரியப் பெருமக்கள் மாணவர் உருவாக்கத்தில் எத்தகு அணுகுமுறைகளைக் கையாளுதல் அவசியம்?

***1. மண்ணின் மென்மையை உணரும் குயவர் :*** ஒரு குயவர் மண்ணின் தன்மையை அறிந்து, அதற்கேற்பப் பாண்டத்தை உருவாக்குகிறார். அதுபோல, ஆசிரியரும் ஒவ்வொரு மாணவனின் திறமைகளையும், பலவீனங்களையும் புரிந்துகொண்டு, அவருக்கேற்ற கல்வி முறையை வடிவமைக்க வேண்டும். சில மாணவர்கள் விரைவாகக் கற்கிறார்கள். சிலருக்கு நேரம் தேவைப்படுகிறது. ஒரு நல்ல ஆசிரியர், மாணவர்களின் வேகத்தை மதித்து, அவர்களின் முழு திறனையும் வெளிக்கொண்டுவரும் குயவராகத் திகழ்கிறார்.

***2. விதையை வளர்த்தெடுக்கும் விவசாயி :***

ஒரு விவசாயி நல்ல விதையைத் தேர்ந்தெடுத்து, நன்கு உழுது, நீரூற்றி, களைகளை அகற்றி விளைச்சலைப் பெறுகிறார். ஆசிரியரும் மாணவர்களின் மனதில் கல்வி எனும் விதையை விதைத்து, அறிவு எனும் நீரை ஊற்றி, சோம்பல் எனும் களைகளை அகற்றி, அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும். ஒரு காய் பழுத்தால், அதன் விதைகள் புது மரங்களாக வளரும். அதுபோல, ஓர் ஆசிரியரின் பணி தலைமுறைகளுக்குப் பயனளிக்கும்.

***3. வழிகாட்டும் விளக்கு :***

இருளில் ஒளி தரும் விளக்கு போல, ஆசிரியர் மாணவர்களின் வாழ்க்கைப் பயணத்தில் வழிகாட்டியாக இருக்கிறார். தவறான வழியில் செல்லாமல், நேர்மையான பாதையைக் காட்டுகிறார். ஒரு விளக்கு பலருக்கு ஒளி தரும் அதுபோல, ஓர் ஆசிரியரின் அறிவுரை பலரின் வாழ்க்கையை மாற்றுகிறது.

***4. உறுதியான அடித்தளம் போன்றவர் :***

ஒரு கட்டடத்தின் வலிமை அதன் அடித்தளத்தைப் பொறுத்தது. ஆசிரியர் மாணவர்களின் வாழ்க்கைக்கு அடித்தளமாக நிற்கிறார். நல்லொழுக்கம், உழைப்பு, விடாமுயற்சி போன்றவற்றை அவர்களுக்கு உணர்த்தி, உறுதியான எதிர்காலத்தைக் கட்டமைக்க உதவுகிறார்.

ஆசிரியர் என்பவர் எதிர்காலத்தைச் செதுக்கும் சிற்பி. கல்வி அவரது பணிக் காலத்தால் அழியாதது. மாணவர்களின் மனதில் அவர் விதைக்கும் கருத்துக்கள், பல ஆண்டுகளுக்குப் பிறகும் பலனளிக்கும். 'கல்வி' என்பது புத்தகங்களில் மட்டுமல்ல, வாழ்க்கையின் ஒவ்வொரு அடியிலும் படிந்திருக்கும் பாடம். எனவே, ஒவ்வொரு ஆசிரியரும் தம் மாணவர்களின் வாழ்க்கையைச் சீரமைக்கும் சிற்பியாகத் திகழ வேண்டும். ஒரு நல்ல ஆசிரியர், நாட்காட்டியை மாற்றுபவர் அல்ல, வாழ்க்கையை மாற்றுபவர்.

**விவாதிக்க**

1. இன்றைய கல்வி முறை (ஒரே மாதிரியான பாடத்திட்டம், தேர்வு மையப்படுத்தப்பட்ட அணுகுமுறை) ஒவ்வொரு மாணவரின்

தனித்திறன்களுக்கு ஏற்ப கற்றலைத் தனிப்பயனாக்குவதை எவ்வாறு தடுக்கிறது?

2. ஓர் ஆசிரியர் "மண்ணின் மென்மையை உணரும் குயவர்" ஆக செயல்பட, கல்வி நிறுவனங்கள் எத்தகைய மாற்றங்களை ஏற்க வேண்டும்? (எ.கா., வகுப்பு அளவு, ஆசிரியர் பயிற்சி, மதிப்பீட்டு முறைகள்)

3. தொழில்நுட்பத்துடன் இணைந்து, ஓர் ஆசிரியர் எப்படி "எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பி"யாகச் செயல்படலாம்? (எ.கா., உணர்ச்சி நுண்ணறிவு, விமர்சன சிந்தனை போன்றவற்றை வளர்த்தல்)

***விவிலிய வினாடி வினாவில் பங்கேற்கும் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகள்...***

- **ஆகஸ்டு மாத விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 08.09.2025, திங்கள்கிழமை.**
- **செப்டம்பர் மாத விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 06.10.2025 திங்கள்கிழமை.**
- **விடைகள்** Google Form (or) PDF **-ல் அனுப்பவும்**

**இரண்டாவது வாரம்**

# அன்பியத்தின் மாதிரி அன்னை மரியாள்

அருட்பணி. **எபின்** MSFS



அன்னை மரியா அன்பியத்தின் முன்மாதிரியாகத் திகழ்கிறார். கன்னி மரியா இயேசுவின் தாயாக இருப்பது மட்டுமல்லாமல், திருஅவையின் தாயாகவும், விசுவாசத்தின் முன்மாதிரியாகவும் விளங்குகிறார். அவர் இறைவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து,

இயேசுவை ஏற்றுக் கொண்டதில் இருந்து, அவரது வாழ்வு முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணித்தலில் முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பிலும், குழந்தைப் பருவத்திலும், அவருடைய பணிவாழ்விலும், இன்னும் அவருடைய சிலுவை மரணத்திலும் தன்னையே இணைத்துக்கொண்டு இயேசுவின் மீட்புப் பணியில் சிறப்பான பங்கை ஏற்கின்றார் அன்னை மரியாள்.

இயேசு வாக்களித்த கடவுளின் வல்லமையாம் தூய ஆவியை எதிர்நோக்கி, குட்டி திருஅவையான சீடர்களுடன் அன்னை மரியாவும் செபித்துக் கொண்டிருந்தார். பரிசுத்த ஆவியின் வல்லமைப் பெற்றால் தான் திருஅவை இயேசு விரும்பிய நற்செய்திப் பணியை இவ்வுலகத்தில் திறமையுடன் ஆற்ற இயலும். திருஅவையும் தொடர்ந்து பரவும். ஆகவே உறுதி தரும் ஆவியின் வருகையை முன்னிட்டு அன்னை மரியா ஏனைய சீடர்களுடன் செபித்துக் கொண்டிருந்தார்.

அன்னை மரியாவும் குட்டித் திருஅவையும் பக்தியுடனும், ஆழ்ந்த நம்பிக்கையுடனும் அமர்ந்து செபித்த ஒன்பது நாட்கள் தான் திருஅவையின் முதல் நவநாள் பக்திமுயற்சி என்று நாம் கருதலாம். இந்த ஒன்பது நாட்கள் செபத்தின் விளைவாகப் பெந்தக்கோஸ்து நாளில் ஆவியானவர் ஆரவாரத்துடன் அங்கு கூடியிருந்தவர் மீது, நெருப்புப் போன்ற வடிவில் இறங்கினார். இவ்வாறு அங்கே கூடியிருந்த முதல் திருஅவைக்கு வல்லமை தந்து, இனி தொடங்க வேண்டிய அகில உலக நற்செய்திப் பணிக்குத் தெளிவும், உற்சாகமும், ஆற்றலும் ஏற்படுத்தினார். (தி.ப.2:1-13). இதுவே திருஅவையின் பிறப்புநாள் என நாம் கூறலாம்.

அன்னை மரியா தங்களோடு தங்கியிருந்ததால், இதுவரை இயேசுவைப் பின்பற்றியிருந்த சீடர்கள் அனைவரும் ஒரு மனத்தோடு இறைவனை வேண்டினார்கள். இயேசுவின் பணிவாழ்வில், குறிப்பாக இயேசு தம் பாடுகளை அறிவித்தபோது அவர்களிடையே ஏற்பட்ட கசப்புகளும், பிளவுகளும், அவருடைய உயிர்ப்பில் மறைந்தன. இதைத் தொடர்ந்து, இயேசு விண்ணகம் சென்ற பிறகு அவர்கள் அனைவரும் அன்னை மரியாவின் தலைமையில் ஒன்றித்து, திருஅவையில் விளங்கவேண்டிய ஒற்றுமைக்கும், உற்சாகத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார்கள்.

இவ்வாறு, குட்டித் திருஅவையைப் பக்தியுடனும், ஆழ்ந்த நம்பிக்கையுடனும் உருவாக்கிய அல்லது வழிநடத்திய அன்பு அன்னையாகவும், இன்றைய குட்டித் திருஅவையாக விளங்குகின்ற அன்பியக் குடும்பங்களின் அடித்தளமாகவும், மாதிரியாகவும் அன்னை மரியாள் திகழ்கிறார். அன்னை மரியாள், தன்னுடைய அன்பின் வழியாகவும், நம்பிக்கையின் வழியாகவும் குட்டி திருஅவையை ஒன்றித்து இந்த பரந்து விரிந்த திருஅவையை உருவாக்கி இருக்கின்றார்.

இப்பெரிய திருஅவை இன்று அன்னையின் அருளோடும், அன்போடும், அரவணைப்போடும் இயங்கிக் கொண்டிருக்கிறதென்றால், அன்னையின் மாதிரியால் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கும் குட்டி திருஅவையான குடும்பங்களும், குடும்பங்களால் அமைக்கப்பட்ட அன்பான அன்பியங்களும் தான். இதுவே திருஅவையின் சிறிய சிறிய தூண்கள். இதனால்தான் திருஅவையின் அடித்தளம் நிலையாகவும், நிறைவாகவும் இருக்கின்றது. மேலும், தொடர்ந்து திருஅவையின் அடித்தளம் நிலையாகவும், நிறைவாகவும் இருக்க வேண்டுமென்றால் தூண்களான அன்பியக் குடும்பங்களும் இறை நம்பிக்கையில் உறுதியாகவும், நிலையாகவும், நிறைவாகவும் இருக்க வேண்டும்.

அன்னை மரியாளின் அன்பிய மாதிரியான இறைநம்பிக்கை, கீழ்படிதல், அர்ப்பணிப்பு, ஆகியவற்றை சீடர்களைப் போன்று நாமும் ஒருமனத்தோடு ஏற்று அன்னை மரியாள் எப்படி இறைவனை தன்னுடைய வாழ்வின் மையமாக வைத்து வாழ்ந்தாரோ, அதே போல் நாமும் இறைவனையும், இறைவார்த்தையையும் அன்னை மரியாவையும் ஒரே அன்பியக் குடும்பமாக ஒரு மனத்தோடு நம் வாழ்வின் மையமாக ஏற்று, தியானித்து இறைவனுடைய அருளையும், அன்னை மரியாவினுடைய அன்பையும், அரவணைப்பையும் ஒரே அன்பியக் குடும்பமாகப்பெற்று, அதே அன்பை அலைக்கடலென அனைவருக்கும் அளிப்போம்.

***அன்னையைப்போல வாழ முனைவோம்***
***அன்பின் வழியில் அன்னையோடு நடப்போம்.***

**சிந்தனை** :

1. அன்பின் திருவுருவமான அன்னையின் வழியில் அன்பு பிள்ளைகளாக வளர்கின்றோமா?
2. அன்பு, அமைதி, அரவணைப்பை ஏற்று, பிறருக்குப்பகிர்ந்து வாழ்கின்றோமா?
3. நாம் பிறருக்கு முன் மாதிரியாக வாழ்க்கின்றோமா?
   (அல்லது)
   மாதிரிகளாக வாழ்கின்றோமா?

**அன்பியப் பணிக்குழு**

**E-mail ID : bcckuzhithurai@gamil.com**
**YouTube : https://www.youtube.com/channel/UCEID2zYUEd7Bmy_MeyNM0g**
**Website : bcckuzhithurai.com**

❀❀❀

மூன்றாவது வாரம்

# எதார்த்தம் பேசும் கண்ணாடி

திரு. **ஜெகதீஸ் பிரபு**, ஆரோக்கியபுரம்.



சாதாரண கண்ணாடி நம்முடைய முகத்தை உடலை மட்டும் பிரதிபலிக்கிறது. ஆனால் எதார்த்தம் பேசும் கண்ணாடி. நம் உள்ளுணர்வை சிந்தனையை குறைகளை, நற்குணங்களை வெளிப்படையாக காட்டும். உதாரணமாக ஒருவர் கண்ணாடிக்கு முன் நின்றால் அவர் சிரிப்பு அழகு. ஆனால் எதார்த்தத்தில், உள்ளம் கோபம் நிறைந்துள்ளது என்று சொல்லக்கூடும்.

சத்தம் நிறைந்த உலகத்தில் அமைதி தான் உண்மைப் பேசுகிறது. அது வாய் திறந்து குரல் கொடுக்காது. ஆனால் உள்ளத்தை வெளிச்சமாய்க் காட்டும். இன்று நம்மில் பலர் வாழ்வில் பல காரணங்களால் அமைதியைத் தொலைத்து இதயத்தில் காயங்களைச் சுமந்து வெளியே சிரித்துக்கொண்டு வாழ்கிறோம்.

1. மனிதர்கள் மதம், இனம், மொழி அடிப்படையில் பிரிந்து சண்டைப் போடுகிறார்கள். இது சமூகத்தில் பகையை உருவாக்கி அமைதியைக் குலைக்கிறது. (எ. கா. இலங்கையில் நடந்த தமிழ் சிங்களர்)
2. நாடுகளுக்கு இடையே அதிகாரப் போட்டிகள், எல்லைப் பிரச்சனைகள் போர்கள் ஏற்படுத்துகின்ற விளைவுகள் இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் இழக்கிறார்கள். உலக அமைதி சீர்குலைகிறது.
3. அரசியல் தலைவர்கள் அதிகாரம் செல்வம் தேடி மக்களைப் புறக்கணித்து ஊழல் அதிகாரத்தால் மக்களில் விரக்தி ஏற்பட்டு. கலகம் உருவாகிறது.
4. குடும்பத்திலும் சமூகத்திலும் ஒற்றுமை குறைந்தால். சிறிய சண்டைகள் பெரியதாகி வன்முறையாக்கப்பட்டு அங்கே அமைதி குலைகிறது.

நம்முடைய வாய் வார்த்தைகளால் பல நேரங்களில் மனதில் அமைதி குறைவதை நாமே உணரலாம். இரு நபர்கள் பேசும் போது

ஒருவர் தவறாகப் பேசியிருந்தால் அதை பொறுமையாக அவருக்குப் புரிய வைக்காமல் பதிலுக்கு இரண்டாம் நபரும் கோபத்தோடு பேசினால், அங்கே இருவரின் மன அமைதியும் குறையும். எதிர்வினையாற்றுவது தான் இதற்கு காரணம். பொறுமையும், சகிப்புத்தன்மையும் நினைவிருந்தால் அதே இடத்தில் அமைதியான சூழலை உருவாக்கி இருக்கலாம். அமைதியால் உலகை வென்றவர்களை பற்றி ஒருகணம் பார்க்கலாம்.

1. அகிம்சை வழியில் சுதந்திரத்தை பெற்றுத் தந்த காந்தி அடிகள், அமைதி தான் மிகப்பெரிய சக்தி என்று உலகிற்கு நிரூபித்தார்.
2. இனவேறுபாட்டிற்கு எதிராக அமைதியான போராட்டம் நடத்தி உலகிற்கு நீதி மற்றும் சமத்துவத்தின் பாடம் கற்றுக் கொடுத்தார்– மார்ட்டின் லூதர் கிங்.
3. அமைதிக்காகப் பாடுபடும் தலைவர்களுக்குக் கொடுக்கப்படும் நோபல் பரிசு அமைதியின் முக்கியத்துவத்தை உலகிற்கு உணர்த்துகிறது.

**சிறுகதை**

ஒரு முறை ஒரு சிறுவன் தன் தந்தையிடம் நான் நல்லவனா? கெட்டவனா? என்று கேட்டான். தந்தை, அவனை கண்ணாடி முன் நிறுத்தி கண்ணாடி உன் முகத்தை காட்டும். ஆனால், உன் மனதை அறிய நீ அமைதியில் உன்னோடு பேச வேண்டும் என்று கூறினார். அந்த இரவு சிறுவன் அமைதியாக அமர்ந்து சிந்தித்தான். தான் செய்த நல்ல காரியங்களும் நினைவுக்கு வந்தன. அதேநேரம் தவறுகளும், சொன்ன பொய்களும் நினைவுக்கு வந்தன. அந்த அமைதியில் தான் அவன் உண்மையை உணர்ந்தான். அதிலிருந்து அந்த சிறுவன் தினமும் சில நிமிடங்கள் அமைதியில், தன்னை ஆராய்ந்து பார்த்துப் பழகினான். காலப்போக்கில் அவன் அமைதியான நல்ல மனம் கொண்டவன் என்று அனைவராலும் அறியப்பட்டான்.

இந்தக் கதையிலிருந்து நாம் அறியக் கூடியது அமைதிதான். நம் வாழ்வின் யதார்த்தம் பேசும் கண்ணாடி அது பொய்யான முகமூடியை கிழிக்கும், நம் மனதின் உண்மையை வெளிக் காட்டும், அது நம்மை நாமே அறிய உதவி செய்கிறது.

**கேள்விகள்** :

1. அமைதியான எதிர்காலத்தை உருவாக்க நாம் நம் தலைமுறையினருக்கு எவ்வாறு உதவுகிறோம்?
2. உலக அமைதியை காக்க நம்மால் செய்ய முடிந்த சிறு சிறு உதவி என்னென்ன?
3. நாம் நமக்கு அடுத்திருப்பவரிடம் பேசும் போது, பக்குவமாக அமைதியை பாதுகாக்கும்படி பேசுகிறோமா?

அமைதி என்பது மிகவும் நுணுக்கமான ஒன்று. போர் வன்முறை,

அநீதி, ஊழல், ஏழ்மை, மத வேறுபாடு ஆகியவை அமைதியை குலைக்கும் முக்கியக் காரணிகள். இதைத் தடுக்க அன்பு, சகிப்புத்தன்மை, நீதிமுறை, சமத்துவம் ஆகியவற்றை வளர்த்தால் தான் உண்மையான அமைதி நிலை நாட்ட முடியும்.

***உங்கள் கவனத்திற்கு...***

**அடித்தளம் இதழ் தேவைப்படுவோர் அந்தந்த மறைவட்ட களப்பணியாளர்களை தொடர்பு கொள்ளவும்.**

❀❀❀

**நான்காவது வாரம்**

# நாகரீகத்தால் மறைக்கப்பட்ட உணவுகள்



திரு. **ஜெஸ்டின்**,
பள்ளியாடி.

**நவதானியங்கள் :**

மனிதன் உயிர் வாழ உணவு எதுவென்றால் அது நம் பாரம்பரிய உணவான சிறுதானிய உணவுகள் தான் என்று உணவியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

நம்முன்னோர்கள் உணவில் சிறு தானியங்களுக்கு முக்கிய பங்கு உண்டு. காலபோக்கில் நாகரீகம் என்ற பெயரில் உடம்புக்கு ஆகாத துரித உணவுகளின் பக்கம் சாய ஆரம்பித்து விட்டோம்.

இளம் வயதைக் கடக்கும் முன்னரே உடல்பருமன், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், இதயநோய், புற்றுநோய் என நோய்களைத் தேடி இழுத்து வலுக்கட்டாயமாக உடம்போடு சேர்த்து வைத்துக் கொள்கிறோம்.

**அந்தக்காலம் :**

காய்ச்சல், தலைவலி, உடல்வலியா ஒரு சுக்கு, மல்லி, காபி

பொண்ணு வயசுக்கு வந்துச்சா உளுந்தங்களியில் நல்லெண்ணெய் விட்டு கிண்டி தருவார்கள்.

பிள்ளை பெற்ற தாய்க்கு சுக்கு, மிளகு, ஓமம் வறுத்து, பனைவெல்லம் சேர்த்து இடித்து உருண்டைப் பிடித்து, பேறுகால மருந்து என்று 30 நாட்கள் கொடுப்பார்கள்.

கொழுத்தவனுக்கு கொள்ளு, இளைச்சவனுக்கு எள்ளு என்று ஒவ்வொன்றும் பார்த்துப் பார்த்து செய்த காலம். மூன்று வேளை உணவுகளிலும் சிறுதானியங்கள், கீரைகள், காய்கறிகள், பழங்கள், பயறுவகைகள், என்று அதிய சத்துள்ளதாக இருந்தன.

**இந்தக்காலம் :**

பெரும்பாலானோருக்கு வாழ்வு முழுவதும் மருந்து மாத்திரைகளாகிப்போனது, இவையெல்லாம் நம் பாரம்பரிய உணவு பழக்கத்தை கை விட்டதன் விளைவு.

**சிறுதானியங்கள் :**

சிறுதானியங்கள் உணவுகளில் புரதங்கள், நார்ச்சத்து, இரும்புச்சத்து, சுண்ணாம்புச் சத்து எனவும் ஏனைய பல சத்துக்களும் நெல்லரிசி, கோதுமையை விட அதிகமாக உள்ளன.

அந்நாட்களில் வரகு அரிசி சோறு, திணை சோறு, சாமை சோறு, குதிரை வாலி அரிசியில் சோறு ஆக்கி பருப்பு, கீரை குழம்புடன் உண்பதுதான் வழக்கில் இருந்தது. தேனும் திணைமாவும் உடலுக்கு தெம்பையும் வலுவையும் கொடுக்கும் அற்புதமான உணவாயிருந்தது.

சூடான கேப்பை (கேழ்வரகு) களியில் ஓர் அச்சு வெல்லத்துண்டை வைத்து அழுத்தி அது ஒரு நிமிடத்தில் பாகு ஆகிவிடும். அதை தொட்டுச் சாப்பிடுவது சிறுவர்களுக்கு விருப்பமான ஒன்று. கருவாட்டுக் குழம்பு கூட இந்தக் கேப்பைகளிக்கு கூடுதல் சுவை கொடுக்கும்.

வயிற்றுப்பூச்சி நீங்க தேங்காய் பால், எள்ளு உருண்டை மாதவிடாய்க்கு நல்லது. சுரப்பிகள், பித்தபைகள் சீராக கறிவேப்பிலை. இவை அனைத்தும் நாகரீக மோகத்தால் மறைக்கப்பட்டன.

மறைக்கப்பட்ட பாரம்பரீய உணவுகள் என்பது தலைமுறை தலைமுறையாகப் பரவலாக அறியபடாத உணவுகள் ஆகும்.

சிறுதானிய உணவுகள், நவதானிய உணவுகள், பழையச் சோறு, மூங்கில் அரிசிச் சோறு, பாரம்பரிய இனிப்புகள் என இந்த மறைக்கப்பபட்ட பாரம்பரிய உணவுகள் பல ஊட்டச்சத்துகளும், மருத்துவக்குணங்களும் கொண்டுள்ளன. இவற்றை மீட்டெடுப்பதும், அவற்றைபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அவசியம்.

அந்தக் காலத்தில் சமையலறைகள் ஆரோக்கியத்தைக் காக்கும் மந்திரகூடமாக இருந்தது. இன்று உணவு கூடமாகச் சமையலில் சுவையூட்டும் மசாலாக்களால் நிறைந்துள்ளது.

அறுசுவையை அதுவும் இயற்கையான சுவையால் நம்

அன்றாட உணவை உண்ண முயல்வோம். உணவுக்கு முன் இனிப்பு அடுத்து காரம், கசப்பு, உப்பு, இறுதியில் புளிப்பு, துவர்ப்பு- இதுபோன்ற வரிசையில் உணவு உண்ணும் போது உடல் ஆரோக்கியமாக அமையும்.

பாரம்பரிய உணவின் மகத்துவத்தைக் குழந்தைகளுக்கும் உணர்த்தி உடல் ஆரோக்கியத்தை நோக்கி முழுமையாக மாறுவோம். பாரம்பரிய உணவுகளான சிறு தானியங்கள், நவ தானியங்கள் அன்றாட உணவில் சேர்த்து ஆரோக்கியத்தோடு வாழ்வோம். நம் எதிர்காலச் சந்ததிக்கு ஆரோக்கிய வாழ்வின் பாதையைக் காட்டுவோம்.

**சிந்தனைக்கு**

1. நவதானியங்களால் நமக்கு கிடைக்கும் நன்மைகள் என்னென்ன?
2. குழந்தைகளின் ஆரோக்கியமான வாழ்விற்கு நவதானியங்களை நாம் கொடுக்கிறோமா?

## தெரிந்து கொள்வோமா...!

1. இந்தியாவில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை எப்போது தொடங்கப்பட்டது **தெரியுமா...**

   **ஜூன் 10, 1890**

2. சீனப்பெருஞ்சுவரின் நீளம் **தெரியுமா...**

   **21,196 கி.மீ**

3. இந்தியாவின் கடற்கரையின் மொத்த நீளம் **தெரியுமா...**

   **11,098.8 கி.மீ (2025 ஆண்டின் படி)**

4. ஈபிள் கோபுரத்தின் உயரம் **தெரியுமா...**

   **330 மீட்டர் (1083 அடி)**

5. தமிழ்நாட்டில் எத்தனை மாவட்டங்கள் **தெரியுமா...**

   **38 மாவட்டங்கள்**

# விவிலிய புதையல்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ர | வோ | ன் | | கூ | |
| ப | மோ | ம | ன் | னா | டா | இ |
| க | சே | கா | னா | ன் | ர | ர |
| ல் | ட | க | ங் | செ | ம் | வு |
| மே | க | த் | தூ | ண் | | |
| ண் | தூ | த் | பு | ப் | ரு | நெ |
| | | | | | | |

## படித்ததில் பிடித்தது.....

ஒருவர் கடவுளிடம் கேட்டார். எல்லாம் ஏற்கனவே விதியில் எழுதப்பட்டிருந்தால், நான் ஏன் முயற்ச்சி வேண்டும்? கடவுள் சிரித்துக் கொண்டே சொன்னார் சில பக்கங்களில் நான் "**உன் முயற்சி போல்**" என்றும் எழுதியிருக்கிறேன்.

குறை கூறுகிறவர்களை எதிரியாக பார்க்காதே..! சில நேரங்களில் அவர்கள் "**குருதட்சணை**" பெறாமல் கற்பிக்கும் "**குருக்களே..!**"

### அன்பு–கருணை

*அன்பு- மனிதனை இணைக்கிறது.*

*கருணை- மனிதனை உயர்த்துகிறது.*

இரண்டுமே சேர்ந்தால் தான் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகவும் அழகாகவும் மாறுகிறது.

# நலத்திட்டங்கள்

## முளகுமூடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| சிராயன் குழி | புனித திருமுழுக்கு யோவான் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 1,000/- |
| செம்பருத்திவிளை | தூய அவிலா தெரசாள் அன்பியம் | மருத்துவ நல உதவி | 4 | 2,600/- |
| | தூய செசிலியம்மாள் அன்பியம் | | 1 | 7,500/- |
| சாய்க்கோடு | புனித சூசையப்பர் அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 9,630/- |
| | தூய சகாய அன்னை அன்பியம் | | | |
| | புனித சவேரியார் அன்பியம் | | | |
| | புனித அல்போன்சாள் அன்பியம் | | | |
| முளகுமூடு | புனித பவுல் அன்பியம் | கல்வி உதவி | 1 | 9,000/- |
| | பரலோக மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,600/- |
| | அவிலா தெரசா அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 10,000/- |
| | அன்பிய ஒருங்கிணையம் மற்றும் அகல் பணிக்குழு | புனித சவேரியார் பல்நோக்கு மருத்துவமனைக்கு மார்பக புற்றுநோய் கருவி வாங்க | 1,00,000/- | |
| | | மொத்தம் | 1,42,330/- | |

## காரங்காடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| காரங்காடு | அன்பிய ஒருங்கிணையம் சார்பாக | மருத்துவ நல உதவி | 1 | 1,32,200/- |
| முரசங்கோடு | வேளாங்கண்ணி அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 3,000/- |
| | அன்பிய ஒருங்கிணையம் சார்பாக | கொத்தன பள்ளம் மனநிலை காப்பகம் | | 10,000/- |
| பண்டாரவிளை | புனித குழந்தை இயேசு அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 11,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| பண்டாரவிளை | புனித அல்போன்சாள் அன்பியம் | பட்டரிவிளை சிறுவர் காப்பகம் | | 6,500/- |
| சேவியர்புரம் | புனித அந்தோணியார் அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 2,000/- |
| இலந்தவிளை | செக்கரியா அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 500/- |
| குழிவிளை | புனித சவேரியார் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 1,000/- |
| கண்டன்விளை | புனித குழந்தை இயேசுவின் திரேசாள் அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 10,000/- |
| | புனித பாத்திமா அன்னை அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 1,250/- |
| | புனித கார்மல் அன்னை அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 2,550/- |
| | புனித அசிசியார் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 500/- |
| | புனித ஆரோக்கிய அன்னை அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 3,000/- |
| | சிறுமலர் அன்பியம் | மருத்துவ நல உதவி | 2 | 1,000/- |

## மாத்திரவிளை மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| துண்டத்துவிளை | புனித சூசையப்பர் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 2,000/- |
| | புனித குழந்தை தெரசாள் அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 600/- |
| | புனித தேவசகாயம் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 2 | 14,000/- |
| செந்தறை | குழந்தை தெரசாள் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 5,000/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 500/- |
| கண்ணன்விளை | குழந்தை யேசு அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 5,000/- |
| | அமல அன்னை அன்பியம் | மருத்துவ உதவி | 2 | 1,500/- |
| | | பெருஞ்சிலம்பு காப்பகம் | | 16,000/- |

## திரித்துவபுரம் மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| இருதயபுரம் | அன்பிய ஒருங்கிணையம் சார்பாக | நல உதவி | 3 | 4,000/- |
| தோமையார்புரம் | தூய மாற்கு அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 1,000/- |
| | தூய அல்போன்சாள் அன்பியம் | மருத்துவ நல உதவி | 2 | 1,000/- |
| பரக்குன்று | தூய லூக்கா அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 3,200/- |
| செம்மங்காலை | தூய அந்தோணியார் அன்பியம்<br>தூய சகாயமாதா அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 2,000/- |
| நல்லாயன்புரம் | புனித ஜாண்போஸ்கோ அன்பியம் | நல உதவி | 3 | 2,750/- |
| | புனித ஜாண்போஸ்கோ அன்பியம் | ஆடு வழங்கியது | 3 | 5,000/- |
| | குழந்தை இயேசு அன்பியம் | திருமண உதவி | 3 | 2,500/- |
| | குழந்தை இயேசு அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 1,000/- |
| | ஆரோக்கிய அன்னை அன்பியம் | கல்வி உதவி | 11 | 2,500/- |
| கல்லுப்பாலம் | ஆரோக்கிய அன்னை அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 3,000/- |
| பாகோடு | 5-வது அன்பியம் | திருமண உதவி | 1 | 3,300/- |
| | 10-வது அன்பியம் | திருமண உதவி | 1 | 500/- |
| | 12-வது அன்பியம் | திருமண உதவி | 1 | 1,500/- |
| மேல்புறம் | புனித செபஸ்தியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| | அன்பிய ஒருங்கிணையம் சார்பாக | திருமண உதவி | 1 | 18,350/- |
| பாலவிளை | புனித சவேரியார் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 1,000/- |
| காக்கவிளை | வேளாங்கண்ணி அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 500/- |
| பாத்திமாபுரம் | அன்பிய ஒருங்கிணையம் சார்பாக | திருமண உதவி | 1 | 2,650/- |

| | | | | |
|---|---|---|---|---|
| மருதங்கோடு | புனித தோமா அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 3,000/- |
| | புனித லூர்து அன்னை அன்பியம் | மருத்துவ நல உதவி | 4 | 1,700/- |
| | புனித தேவசகாயம் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 500/- |
| | யோசேப்பு அன்பியம் | மருத்துவ நல உதவி | 2 | 500/- |
| சூசைபுரம் | 1-ம் அன்பியம் | ஆடு வழங்கியது | 1 | 5,000/- |
| தோட்டச்சாணி | தூய மாற்கு அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 2,000/- |
| | தூய லூக்கா அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 2,000/- |
| திரித்துவபுரம் | லூர்து மாதா அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 500/- |

## புத்தன்கடை மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| கொல்வேல் | புனித கார்மல் அன்னை அன்பியம்<br>புனித அல்போன்சம்மாள் அன்பியம் | சிறார் காப்பகம் | | 13,000/- |
| செறுதிக்கோணம் | குழந்தை இயேசு அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 2,500/- |
| நாகக்கோடு | புனித அல்போன்சம்மாள் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 10,000/- |
| | புனித தோமா அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 10,000/- |
| ஈஞ்சக்கோடு | குழந்தை தெரசா அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 1,000/- |
| குலசேகரம் | புனித லூர்து அன்னை அன்பியம் | திருமண உதவி | 1 | 5,000/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் | நல உதவி | 1 | 500/- |
| | | நல உதவி | 1 | 500/- |
| | | கல்வி நல உதவி | 1 | 1,000/- |

## வேங்கோடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| வளனூர் | புனித மிக்கேல் அதிதூதர் அன்பியம் | நல உதவி | 1 | 2,000/- |
| | | நல உதவி | 1 | 4,000/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 2,000/- |
| புதுக்கடை | அன்பிய ஒருங்கிணையம் சார்பாக | கல்வி நல உதவி 10 வகுப்பு தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு 1,000/- வீதம் | 15 | 15,000/- |
| | | கல்வி நல உதவி 12 வகுப்பு தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு 1,500/- வீதம் | 15 | 22,500/- |
| வேப்புவிளை | புனித இஞ்ஞாசியார் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 1,000/- |
| | புனித ஜார்ஜியார் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 1,000/- |

## பங்களவில் புதிய நிர்வாகிகள்

### திரித்துவபுரம் மறைவட்டம்

**வெட்டுவெந்தி ஒருங்கிணையம்**

தலைவர் : திரு. ஜெபகுமார்
து.தலைவர் : திருமதி. அல்போன்சா
செயலர் : திருமதி. ஷீலா மலர்
து.செயலர் : திரு. ஆன்றோ
பொருளர் : திருமதி. அனிதா குமாரி

### வேங்கோடு மறைவட்டம்

**விழுந்தயம்பலம் :**

தலைவர் : திருமதி. சுதா
து.தலைவர் : திரு. ஜோஸ்
செயலர் : திருமதி. ஷைகிலா
து.செயலர் : திருமதி. பிரபா
பொருளர் : திருமதி. விமலாகுளோறி

**வேங்கோடு மறைவட்ட புதிய பொருளர்** : திரு. அமலதாஸ்

## முளகுமூடு மறைவட்டம்

### சோலாபுரம் :

தலைவர் : திரு. T. M. மத்தியாஸ்
து.தலைவர் : திரு. D. ஆல்பன்
செயலர் : திருமதி. J. ஜோஸ்பின் சுமிலா
து.செயலர் : திருமதி. ஆனந்தி
பொருளர் : திருமதி. சகாய கில்டா

### சிராயன் குழி :

தலைவர் : திரு. ஏசுதாஸ்
து.தலைவர் : திரு. அபிலாஷ்
செயலர் : திருமதி. பத்மா மேரிஸ் கில்டா
து.செயலர் : திருமதி. ஜெபிகலா
பொருளர் : திருமதி. மோன்சிராணி

### பெருஞ்சிலம்பு :

தலைவர் : திரு. C. ஸ்டாலின்
து.தலைவர் : திருமதி. T. ஷீதா
செயலர் : செல்வி B.G. மெல்கியா சுபிக்ஷா
து.செயலர் : திருமதி. T. ஜெப ராணி
பொருளர் : திருமதி. S. ஜோஸ்பின் மேரி ஏஞ்சல்

### ஈத்தவிளை :

தலைவர் : திருமதி. சுஜா
து.தலைவர் : திரு. ஜோண்ஸ்
செயலர் : திருமதி. பிரபாஜெஸி
து.செயலர் : திருமதி. நிர்மலா
பொருளர் : திருமதி. ஜாக்குலின் லீமா

# ஆசிரியர்...!!!

கரும்பலகையில் கை பதித்து
சுண்ணாம்புத் தூளை தினம் சுவாசித்து
கற்றுக்கொடுத்துக் கற்றுக்கொடுத்து
காற்றை இழந்த
ஆசிரியர் இதயத்தில்
இன்னும் இருக்கிறது வலி
மாணவன் மண்ணாகிப் போவானோ
என்றெண்ணி கண்டித்த ஆசிரியரை
தண்டித்த சமூகம்

வழிகாட்டிய மனிதனுக்கு
வலி ஊட்டிய சமூகம்
ஆசிரியர்கள் ஏணிப்படிகள்
என்பதால் தான் என்னவோ
எல்லாரும் ஏறி மிதிப்பார்கள் போலும்
மரியாதைக்குரிய
ஆசிரியரை அவமரியாதைக்கு
ஆளாக்கும் ஆணவச் சமூகம்
காக்க வேண்டிய கடவுளை
தாக்க வேண்டிய அவசியம் எப்படி வந்தது?

கத்திக் கத்திக் கற்பித்த குற்றத்திற்கு
கத்திக்குத்து தான் பரிசா?
மாணவனை மகனாகப் பார்க்கும்
ஆசிரியரை எதிர்வினையாக்கி
எதிர்த்துப்பேசும் சமூகம்
சிற்பி, கல்லைக் காயப்படுத்துவதாய்க் கருதி
சிற்பியைக் காயப்படுத்தினால்
சிலை எப்படி கிடைக்கும்?

மாணவனைச் செதுக்க நினைக்கும்
ஆசிரியரைத் தண்டித்தால்
நல்ல சமுதாயம் எப்படி கிடைக்கும்?
காலையில் பள்ளிக்கு ஆசிரியராய்ச் சென்று
மாலையில் வீட்டிற்கு அப்பாவாய், அம்மாவாய்
திரும்புவதே சவாலானதே
பள்ளியில் மாணவனைத் திட்டிவிட்டு
படுக்கையில் உறங்காமல்
கிடப்பவனே இன்றைய ஆசிரியன்

ஒருபுறம் தேர்ச்சிக்கான நெருக்கடி
மறுபுறம் ஒத்துழைக்க மறுக்கும்
மாணவனின் தேள்கடி
நடுவில் காயம் பட்ட ஆசிரியர்கள்
கற்பித்தலைக் கடமையோடு செய்யும்
கல்விக்கடவுளாய் எப்போதும் இருப்போம்.



# சிறார் பக்கம்

## சிறுகதை

## ஒற்றுமை

ஒரு பெரியவருக்கு நான்கு மகன்கள், நால்வரும் எப்போதும் சண்டை போட்டு கொண்டே இருப்பார்கள். அதனை கண்டு அவர் மிகவும் வருத்தம் அடைந்தார். ஒற்றுமையாக இருங்கள் என்று கூறியும் அவர்கள் முடியாது என கூறிவிட்டார்கள். ஒரு நாள் அவருக்கு உடல் நலம் சரி இல்லாமல் போகவே, அவர்களுக்கு பாடம் புகட்ட புத்தி சொல்ல ஒரு போட்டியை வைத்தார். நால்வரையும் ஆளுக்கொரு கொம்புகளை கொண்டு வர சொன்னார், அவர்களும் கொண்டு வந்தார்கள். தன் மூத்த மகனை அழைத்து நான்கு கொம்புகளையும் ஒன்றாக கட்ட சொன்னார். பிறகு ஒவ்வொருவரையும் அழைத்து அந்த கட்டிய கொம்புகளை உடைக்க சொன்னார். யாராலும் முடியவில்லை. பிறகு கட்டுகளை அவிழ்த்து ஒவ்வொன்றாக கொடுத்து உடைக்க சொன்னார், அனைவரும் சுலபமாக உடைத்தார்கள். ஒற்றுமையோட பலம் என்னனென்னு இப்போ தெரியும் என்று நினைக்கிறேன். நீங்கள் நான்கு பேரும் நான்கு கொம்புகளை போலதான். ஆனால் ஒற்றுமையாக இருந்தால் யாராலும் உங்களை அசைக்க முடியாது என்று கூறினார். நான்கு மகன்களுக்கும் ஒற்றுமையின் பலம் புரிந்தது. அன்றிலிருந்து நால்வரும் சண்டையிடாமல் ஒற்றுமையாய் வாழ தொடங்கினார்கள்.

**சிந்தனை :**

1. ஒற்றுமையாக வாழ நாம் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கிறோமா...
2. ஒற்றுமையாக வாழ்ந்தால் ஏற்படும் நன்மைகள் பற்றி உங்கள் கருத்து...

## உங்கள் கவனத்திற்கு :-

அக்டோபர் மாத அடித்தளம் "**வெளிச்சத்தின் வேர்கள்**" என்னும் சிந்தனையில் வர உள்ளது. உங்கள் படைப்புக்கள், கதைகள், கட்டுரைகள், துணுக்குகள், சிந்தனைகளை (15-9-2025) தேதிக்குள் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். சிறந்த படைப்புக்கள் அடித்தளம் இதழில் இடம் பெறும்.

**குறிப்பு :**
(எழுதும் நபர்; பெயர், பங்கு, அன்பியம், தொடர்பு எண், தெளிவாக எழுதவும்)

**முகவரி :**

அன்பிய இயக்குநர்,
அன்பிய பணிக்குழு,
டிரினிட்டி மேய்ப்புப்பணி மையம்,
உண்ணாமலைக்கடை - 629 179.

## சிந்தனைக் கதை

ஒரு சிறுவனின் செருப்பை கடல் அலை அடித்துச் சென்றது...! அவன் கடற்கரை மணலில் இக்கடல் **ஒரு திருடன்** என எழுதி வைத்தான்...! ஒரு மீனவனுக்கு அபரிமிதமான மீன்களை கடல் அள்ளிக் கொடுத்தது...! அவன் கடற்கரையில் **வாரி வழங்கும் கடல்** என பதித்து வைத்தான்...! கடலில் முத்துக்குளிக்கும் ஒருவனுக்கு முத்துக்கள் கிடைத்தன...! அவன் கடற்கரையில் **வளம் மிக்க கடல்** என்று எழுதி வைத்தான்...! இளைஞன் ஒருவன் கடலில் மூழ்கி மரணித்தான்...! அவனது தாய் இது ஒரு **கொலைகாரக்கடல்** என எழுதி வைத்தாள்...! பின்னர் ஒரு பேரலை வந்து அவர்கள் கரையில் பதித்து வைத்த யாவற்றையும் அழித்துவிட்டு, **கடல் அன்றாடப் பணியை தொடர்ந்தது...!**

## நகைச்சுவை துணுக்கு

1. சர்வதேச அறிவியல் மாநாட்டில் ஐந்து நாடுகளைச் சேர்ந்த மாணவர்களிடத்தில் கேட்கப்பட்ட கேள்வி

***வெப்பமாக்கப்படும் போது திரவ நிலையில் இருந்து திடநிலைக்கு மாறும் பொருள் எது?***

- சீனா வாய்ப்பே இல்லை அதுபோன்ற கேள்விக்கு எந்தப் புத்தகத்திலும் பதில் இல்லை.
- லண்டன் எந்த இணைய தளத்திலும் இதற்கான பதில் இல்லை.
- பிரான்ஸ் அர்த்தமற்ற கேள்வி.
- அமெரிக்கா பதில் தெரியாது.
- இந்தியா லூசு பசங்களா இதுகூட தெரியாது...!

தோசை டா...!

## ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்

| வாரம் | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | 07.09.2025 | சா.ஞா. 9: 13-18 | பிலி. 9: 10,12-17 | லூக். 14: 25-33 |
| 2 | 14.09.2025 | எண். 21: 4-9 | பிலி. 2: 6-11 | யோவா. 3: 13-17 |
| 3 | 21.09.2025 | ஆமோ. 8: 4-7 | 1 திமொ. 2: 1-8 | லூக். 16 1-13 |
| 4 | 28.09.2025 | ஆமோ. 6: 1,3-7 | 1 திமொ. 6: 11-16 | லூக். 16: 19-31 |

அடித்தளம் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்புக்கு.... 9487110298, 8870513177

அன்பிய இயக்குநர்
அன்பிய பணிக்குழு, டிரினிட்டி மேய்ப்புப்பணி மையம்,
உண்ணாமலைக்கடை - 629 179



திரித்துவபுரம் மறைவட்ட செயற்குழு கூட்டம்



மறைமாவட்ட செயற்குழு கூட்டம்



மாத்திரவிளை மறைவட்ட செயற்குழு கூட்டம்



மறைமாவட்ட செயற்குழு விவிலிய வினாடி வினா தயாரிப்பு



முளகுமூடு செயல்தள கூட்டம்



வேங்கோடு மறைவட்ட செயற்குழு கூட்டம்



மணலிக்கரை செயல்தள கூட்டம்



முளகுமூடு மறைவட்ட நிர்வாகிகள் கூட்டம்

# POPE JOHN PAUL II COLLEGE OF EDUCATION



**MULAGUMOODU**

Administered by the Diocese of Kuzhithurai






Recognized by
NCTE, New Delhi

Affiliated with
Tamil Nadu Teachers Education
University, Chennai

## 2025-2026

**B.ED. ADMISSION IS GOING ON**

**JOIN NOW!**

**NO DONATION**
**AFFORDABLE FEE**

**Nanjil Milk plant campus,**
**Mulagumoodu**

## DISTINCTIVE FEATURES

1. Communicative English Classes
2. Digital Learning Facilities
3. Special Computer Education Programme
4. Life Orientation Programmes
5. Preparation for Competitive Examinations
6. Training in Various Arts
7. Add-on Courses for advanced Pedagogy (Certified by the Central Government of India)
8. Campus Interviews for Placements
9. Driving Classes (Two- and Four -Wheelers)
10. Effective Instructional Strategies for learning outcomes

## SUBJECTS OFFERED

COMMERCE & ECONOMICS, HISTORY, PHYSICAL SCIENCE, BIOLOGICAL SCIENCE, COMPUTER SCIENCE, MATHEMATICS, TAMIL, ENGLISH

04651 249585
73589 26485, 95971 09985
www.popejohnpaul2.edu.in
popejohnpaul2@gmail.com